**B 1018** **UTA 2**

B.Ed. DEGREE EXAMINATION, MAY 2010

(For the candidates admitted during the academic year 2009-2010)

*Optional Course* : — TAMIL — PAPER II

Time : 3 hours Maximum marks : 80

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் 50 சொற்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 2 மதிப்பெண்கள்.

1. பண்புமொழிக் கொள்கை என்றால் என்ன?

2. கல்வியின் நோக்கங்கள் யாவை?

3. தமிழில் உள்ள இரு கூட்டொலி எழுத்துக்கள் யாவை?

4. மொழிக் கல்வியின் இன்றியமையாமை யாது?

5. வல்லினம் மிகு இடத்திற்கு இரு சான்றுகள் தந்து எழுதுக.

6. இறைச்சி தோன்றுவதற்குரிய நிலைக்களன் பற்றி எழுதுக.

7. புதுக்கவிதையில் பயன்படுத்தப்பெறும் உத்திகளுள் ஏதேனும் இரண்டனைச் சான்றுகளுடன் எழுதுக.

8. நாடக வகைப்பாட்டை எழுதுக.

9. இலக்கியத் திறனாய்வாளருக்குரிய தகுதிகள் யாவை?

10. டாக்டர் மு.வ. வின் புதினங்களுள் ஒன்று பற்றிக் குறிப்பு வரைக.

11. தமிழ் இணையத் தளங்கள் பற்றி எழுதுக.

12. செம்மொழித் தமிழ் – குறிப்பு வரைக.

பகுதி ஆ — (6 × 5 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் 200 சொற்கட்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 5 மதிப்பெண்கள்.

13. மொழியின் பண்புகள் பற்றிக் கருத்துரைக்க.

14. கலைத்திட்ட கோட்பாடுகள் யாவை?

15. பண்பாட்டில் பின்தங்கியவரை ஈடுசெய்யும் கல்வி முறை பற்றி எழுதுக.

16. இலக்கிய வகைகள் பற்றி விளக்குக.

17. இலக்கியத்துள் கற்பனை பெறுமிடம் யாது? விளக்குக.

18. சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் நாடகம் பற்றிய செய்திகள் யாவை?

19. பயண இலக்கியத்தின் பயன்களைக் கூறி, நெ.து. சுந்தர வடிவேலுவின் பயண அனுபவங்களை விளக்குக.

20. தமிழ் கற்பித்தலுக்குப் பல்லூடகம் எவ்வாறு பயன்படுகிறது?

பகுதி இ — (2 × 15 = 30 மதிப்பெண்கள்)

இரண்டு வினாக்களுக்கும் விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் 600 சொற்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) தமிழ் மொழி வரலாறு பற்றி விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழிக் கல்வியில் மாணவர்கள் என்னென்ன பிழைகள் செய்கிறார்கள் என்பதை எழுதி, பிழை களையும் வழிமுறைகளை விளக்குக.

22. (அ) இசையும், தமிழும் இணைந்துள்ள நிலையை ஆய்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பு என்றால் என்ன? அதன் வகைகளைப் பட்டியலிட்டு, மொழி வளர்ச்சியில் மொழி பெயர்ப்பு பெறும் பங்கினை விளக்குக.